1

சுருக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பெயரில் விருது அறிவித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஏ1) துறை

அரசாணை (நிலை) எண்.225 நாள்: 3.8.2015

மன்மத, ஆடி–18

திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 31.7.2015 நாளிட்ட அறிக்கை.

-----

ஆணை:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமது அறிக்கையில், விஞ்ஞானிகள், அறிஞர்கள், கவிஞர்கள், தத்துவ மேதைகள், ஈடு இணையில்லா தலைவர்கள் என பலரையும் இந்தியாவிற்கு தமிழன்னை வழங்கியுள்ளாள் என்றும், அந்த வகையில் 'இந்தியாவின் ஏவுகணை நாயகன்' 'அணுசக்தி நாயகன்' மற்றும் 'தலைசிறந்த விஞ்ஞானி' என்றும், 'திருக்குறள் வழி நடந்தவர்' என்றும், 'இளைஞர்களின் எழுச்சி நாயகன்' என்றும் போற்றப்படும் பன்முகத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் A.P.J. அப்துல்கலாம் அவர்கள் தமிழகம் பெற்றெடுத்த தலைமகன் ஆவார் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

2. இராமேஸ்வரத்தில் ஏழை குடும்பத்தில் பிறந்த திரு. அப்துல் கலாம் அவர்கள் கடின உழைப்பாலும், ஒருமுக சிந்தனையாலும், விடா முயற்சியாலும் சிறந்த விஞ்ஞானியாக திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல், அனைத்து தரப்பு மக்களாலும் போற்றப்படும் குடியரசுத் தலைவராகவும் விளங்கினார். குடியரசுத் தலைவராக இருந்த போதும் சரி, அதன் பின்னரும் சரி, அவரது சிந்தனை எப்பொழுதும் மாணாக்கர்கள், இளைஞர்கள் ஆகியோரைப் பற்றியே இருந்தது. 2020ஆம் ஆண்டுக்குள் இந்தியா ஒரு வல்லரசு ஆக வேண்டும் என்று கனவு கண்டவர் திரு. அப்துல் கலாம் அவர்கள். மாணாக்கர்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரால் தான் அந்தக் கனவை நனவாக்க முடியும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இந்தியா வல்லரசாக உருவெடுக்க, மாணாக்கர்களிடையே தன்னம்பிக்கை மிகவும் அவசியம் என்பதால் தான் மாணாக்கர்களை, 'கனவு காணுங்கள், அந்தக் கனவு உறக்கத்தில் வரும் கனவாக இருக்கக் கூடாது. உறக்கத்தை விரட்டும் கனவாக இருக்கவேண்டும்' என தன்னம்பிக்கையை வளர்க்கும் விதமாக எடுத்துக் கூறினார். 'வெற்றி பெற வேண்டும் என்ற பதட்டமில்லாமல் இருப்பது தான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி' என வெற்றியின் ரகசியத்தை மாணாக்கர்களுக்கு போதித்தார் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

...2

-8-



3. திரு. அப்துல் கலாம் அவர்கள் ஆசிரியராக இருப்பதையே பெரிதும் விரும்பினார். இளைய தலைமுறையினரையும், மாணாக்கர்களையும் தனது பேச்சினாலும், கருத்துக்களாலும் கவர்ந்ததோடு மட்டுமல்லாமல், அவர்கள் வாழ்வில் உன்னத நிலையை அடைவதற்கும், இந்தியாவின் வளர்ச்சிக்கு அவர்கள் சிறந்த பங்காற்றிடவும் உந்துசக்தியாக விளங்கினார் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

4. வலிமையான பாரதம்; வளமையான தமிழகம் என்ற கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. இதற்கு வலுவூட்டும் வகையில், மறைந்த திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் நினைவைப் போற்றும் விதமாக 'டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது' என்ற ஒரு விருது ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

5. இந்த விருது விஞ்ஞான வளர்ச்சி, மனிதவியல் மற்றும் மாணவர்கள் நலன் ஆகியவற்றிற்கு பாடுபட்டு வரும் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படும். இந்த விருதாளருக்கு 8 கிராம் தங்கத்தால் ஆன பதக்கம் மற்றும் ரூ.5இலட்சம் ரொக்கம், பாராட்டு சான்றிதழ் ஆகியவை வழங்கப்படும். இந்த விருது இந்த ஆண்டு முதல் வழங்கப்படும்.

6. பாரத ரத்னா டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருதிற்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்காக கீழ்க்கண்ட நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என அரசு அறிவுறுத்துகிறது:-

6.1. இப்பதக்கம் வட்ட வடிவிலானதாகும். இப்பதக்கத்தின் முன்புறத்தில் டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது என்ற வார்த்தைகள் தமிழில் பொறிக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். (விருது வழங்கும் ஆண்டும் பொறிக்கப்பட வேண்டும்). பதக்கத்தில் கீழே இந்த விருதை பெறுபவரின் பெயர் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். பதக்கத்தின் பின்புறத்தில் தமிழ்நாட்டின் சின்னமான கோபுரமும், தமிழ்நாடு அரசு என்று மேலேயும், வாய்மையே வெல்லும் என்ற அரசின் வாசகம் கீழேயும் பொறிக்கப்பட வேண்டும்.

6.2. ஒரு வருடத்திற்கு ஒருமுறை இவ்விருது வழங்கப்படும். இவ்விருதை பெறுபவரின் பெயர் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்.

6.3. அரசினால் இதற்காக ஏற்படுத்தப்பட்ட தேர்வுக்குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

6.4. தேர்வுக்குழுவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் இடம் பெறுவர்:-

| | | |
|---|---|---|
| குழுத்தலைவர் | - | தலைமைச் செயலர் |
| உறுப்பினர்கள் | - | 1. முதன்மைச் செயலர், நிதித்துறை |
| | | 2. முதன்மைச் செயலர், பொதுத்துறை |
| | | 3. முதன்மைச் செயலர், பள்ளிக்கல்வித் துறை |
| உறுப்பினர் செயலர் | - | செயலாளர், உயர்கல்வித் துறை |

7. தேர்வுக்குழுவின் உறுப்பினர் செயலரால் விஞ்ஞான வளர்ச்சி, மனிதவியல் மற்றும் மாணாக்கர் நலன் ஆகிய துறைகளில் பெரும் பங்காற்றிய நபர்களின் விவரங்கள் பெறப்பட்டு தேர்வுக்குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட வேண்டும். அவற்றிலிருந்து ஒரு நபரை தேர்வுக்குழு பாரத ரத்னா டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருதுக்காக பரிந்துரை செய்யும். தேர்வுக்குழுவின் பரிந்துரையின் பேரில் அரசின் ஆணையை பெற்று தேர்வுக்குழுவின் உறுப்பினர் செயலர் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் பெயரை பொதுத்துறை (பொது-I) பிரிவுக்கு சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கும் வகையில் பதக்கம் மற்றும் ரொக்கப் பரிசுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசு செயலாளர்கள், சென்னை-9.
அனைத்து துறைகள், சென்னை-9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
பணி மேலாளர், அரசு அச்சகம், சென்னை-79 அரசிதழில் வெளியிட வேண்டி.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-104.
ஆளுநர் செயலர், ராஜ்பவன், சென்னை-25.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர் -I, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
பொதுத் (க.ம) துறை, சென்னை-9.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கே.வி.ராதா
3.8.15
பிரிவு அலுவலர்